தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-1-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தைப்பட்ட சின்ன வெங்காயத்தின் விலை சீராக இருக்கும்

உலகளவில், சின்ன வெங்காய உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா முதன்மை வகிக்கிறது. இந்தியாவில், மொத்த சின்ன வெங்காய உற்பத்தியில் தமிழ்நாடு 90 சதவீதம் பங்களிக்கிறது. இந்தியாவிலிருந்து சின்ன வெங்காயம், ஐக்கிய அரபு நாடுகள், மலேசியா, இந்தோனேசியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சின்ன வெங்காயம், 2014-15ல் பெரம்பலூர் (7948 எக்டர்), திருச்சி (3500 எக்டர்), திண்டுக்கல் (3500 எக்டர்), தூத்துக்குடி (1300 எக்டர்), நாமக்கல் (1988 எக்டர்), விருதுநகர் (1242 எக்டர்), கோயம்புத்தூர் (1131.5 எக்டர்) மற்றும் ஈரோடு (860 எக்டர்) ஆகிய மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. இவை தமிழ்நாட்டில், மொத்த சின்ன வெங்காய சாகுபடி பரப்பில் 88 சதவீதமும், உற்பத்தியில் 89 சதவீதமும் பங்களிக்கிறது. கடந்த ஆண்டுகளில் (2012-13ல்) சின்ன வெங்காய சாகுபடி பரப்பை ஒப்பிடும் போது தற்போது (2014-15ல்) 12.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கு 2013-14ல் நிலவிய நல்ல பருவ மழை மற்றும் அதிக விலையே ஆகும்.

தற்போது நாமக்கல், கரூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து வரத்து துவங்கியுள்ளது. கர்நாடகாவிலிருந்து துவங்கிய சின்ன வெங்காய வரத்து டிசம்பர், 2014ல் முடிவடைந்துள்ளது. நல்ல தரமான சின்ன வெங்காயம், தற்போது விலை கிலோவிற்கு ரூ.15 -20 வரை திண்டுக்கல் சந்தையில் விற்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 17 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், தரமான சின்ன வெங்காயத்தின் விலை ஏப்ரல் - மே மாதங்களில் கிலோவிற்கு ரூ.22 முதல் ரூ.24 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் சின்ன வெங்காய விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில், கோ-5 இரகம், வட்ட வடிவம், இளஞ்சிவப்பு மற்றும் 27 மி மீ விட்டம் மற்றும் அதற்கு மேல் உள்ள இரகமாகும். இது ஏற்றுமதி தரம் வாய்ந்த மற்றும் அதிக விலை கிடைக்க வாய்புள்ள இரகமாகும்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422-2431405

<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374/ 6611283

மக்கள் தொடர்பு அலுவலர்